மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# பூந்தழல் மரபு கவிதைத் தொகுப்பு இன்றைய இளைஞர்களுக்குச் சிறந்ததொரு வழிகாட்டி

# Poontzhal Traditional Poetry Collection an Excellent Guide For Today's Youth

ஓம் பிரசாத் அங்கணாதி/ Om Perasath Anganathi[1]
[1]Undergraduate Student, Faculty of Languages and Communication, Sultan Idris Education University
Corresponding Email: omperasath@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

பூந்தழல் மரபு கவிதைத் தொகுப்பு இன்றைய இளைஞர்களுக்குச் சிறந்ததொரு வழிகாட்டியாக அமைகின்றது என்பதே இவ்வாய்வின் நோக்கமாகும். இளைஞர்களுக்குக் கூற வேண்டிய அறக்கருத்துக்களையும், சமுதாயச் சிந்தனைகளையும், மொழி பற்றையும், காதல் உணர்வு, இயற்கை என மேலும் பல கருத்துக்களை இந்த நூல் வெளிப்படுத்துகின்றது என்பதை தெரிந்து கொள்ள முடிகின்றது. இந்த ஆய்வு பண்புசார் அணுகு முறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பூந்தழல் மரபு கவிதைத் தொகுப்பில் இருக்கக்கூடிய கவிதைகள் தான் இந்த ஆய்வின் முதல் நிலை தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இன்றைய இளைஞர்கள் பின்பற்ற வேண்டிய கருத்துக்களையும் அவர்கள் செயலாற்றக்கூடிய கடமைகளையும் சிறந்த முறையில் இந்த பூந்தழல் மரபு கவிதைத் தொகுப்பு எடுத்துரைக்கின்றது என்பதை அறிய முடிகின்றது.

**கருச்சொற்கள்:** பூந்தழல் மரபுகவிதைத் தொகுப்பு, இன்றைய இளைஞர்கள், சிறந்ததொரு வழிகாட்டி

**Abstract**

The aim of this research article is to justify 'Poontzhal' traditional poetry collection an excellent guide for today's youth. It can be known that this book expresses many other ideas such as morals, social thoughts, love of language, feelings of love, nature and many more to be told to the youth. This research has been carried out using qualitative approach. Poems that can be found in Poontzhal poetry collection book have been used as the primary data of this research. It can be seen that this Poontzhal poetry collection book highlights the ideals that today's youth should follow and the duties that they should perform to the language and society.

**Keywords:** 'Poontzhal' traditional poetry collection, excellent guide, today's youth

**முன்னுரை**

ஒரு மனிதர்களின் வளர்ச்சி நிலையின்படி 15 முதல் 25 வயதுக்கு உட்பட்டவர்களை இளைஞர்கள் என ஐநா சபை வரையறை செய்துள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன. இந்த வயதில் தான் ஒரு மனிதனுக்குச் சமூகத்தின் உடனான தொடர்புகள் தொடங்கப்படுகின்றது என்பதையும் ஆய்வுகள் கூறுகின்றது. நாளைய சமுதாயத்தின் தூண்களாகவும் வருங்கால தலைவர்களாகவும் அறியப்படும் இளைஞர்களின் செயல்பாடுகளை ஒழுங்கு படுத்துவதன் மூலம் ஒரு உயர்தரமான சமுதாயத்தை உலகிற்குக் கொண்டு சேர்க்க முடியும். ஒரு இளைஞர்களின் முன்னேற்றமானது அகம் புறம் என இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒரு தனிநபர் திறன்களை வளர்த்தல் என்பது அகம் சார்ந்த முன்னேற்றம் ஆகவும் ஒரு சமூக மேம்பாட்டிற்காகக் கருதி சமூகம் நாடு மக்கள் வளர்ச்சி மாற்றம் என ஈடுபட்டு அதில் பங்கேற்றால் புற முன்னேற்றமாக இளைஞர்களுக்கு வகுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் ஒரு இளைஞனாவன் சிறந்ததொரு வழிகாட்டியைக் கொண்டிருத்தல் அவசியம். புத்தகங்களை விட சிறந்ததொரு வழிகாட்டி எவருக்கும் கிடையாது என்பதற்கு ஏற்ப மலேசிய மரபுக் கவிஞர் மு ஆசை தம்பி என்பவரால் இயற்றப்பட்ட பூந்தல் எனும் மரபுக் கவிதை தொகுப்பு இன்று இளைஞர்களுக்குச் சிறந்ததொரு வழிகாட்டியாக அமைகின்றது எனலாம். இந்த மரபு கவிதை தொகுப்பில் மொழி குமுகாயம் காதல் இயற்கை வாழ்த்து இரங்கல் கதம்பம் வண்ணப்பா எனப் பல பாடுப்பொருளில் இளைஞர்களுக்குச் சிறந்ததொரு படிப்பினைகளைக் கூறும் வகையில் இயற்றி இருக்கின்றார்.

**தரவுப் பகுப்பாய்வு**

**தமிழ் அறிஞர்களைத் தெரிந்துகொள்ள வழிவகுகின்றது**

தமிழ் இலக்கியப் பாடல்களை எடுத்துக் கொண்டால் அதில் கவிச்சக்கரவர்த்தியாகத் திகழ்ந்தவர் கம்பர். கம்பரின் வீரத்திற்கும் திறனுக்கும் தமிழ் ஞானத்திற்கும் ஈடு இணை எதுவும் இல்லை எனக் கூறலாம். அப்படிப்பட்ட வான்சிறக்க வாழ்ந்த கவிச்சக்கரவர்த்தி கம்பனை இன்றி இளைஞர்கள் கட்டாயம் அறிந்திருக்க வேண்டும் என்பதை

சிந்தை இனிக்கச் செவிஇனிக்கக் கம்பனவன்
சந்தக் கவியில் தமிழ்தொடுத்துச் - சொந்தத்
தமிழனுக்குத் தந்து தடம்வகுத்துச் சென்றான்!
அமிழ்ததன் ஆழம் அறி!

(கம்பனைப் படி, பக்கம் 4, மொழி)

என்று நேரிசை வெண்பாவின் வழி நம் சிந்தனைக்கும் காதுகளுக்கும் இனிமையாகப் பாடல்களைக் கொடுத்து தன்னுடைய தமிழுக்காகத் தடம் பதித்து சென்ற கம்பனின் அமிழ்தமான பாடல்கள் கூறும் கருத்துக்களை வாழ்க்கையில் பின்பற்ற வேண்டும் என்ற மொழி பற்றினை ஊட்டுகின்றார். இன்றைய இளைஞர்கள் கம்பனை மட்டும்மின்றி தமிழுக்காகத் தடம் பதித்த ஒவ்வொரு அறிஞர்களையும் அறிந்து அவர்களின்

வழிகாட்டுதலைப் பின்பற்றி வாழ வேண்டும் என்ற கருத்தையும் கூறி இந்த வரிகளை இன்றைய இளைஞர்களுக்குச் சிறந்ததொரு வழிகாட்டியாக அமைத்திருக்கின்றார்.

**புகழ் நிலையற்றது**

புகழ் என்பது எவர் ஒருவர் ஈகையைத் தனது பண்பாகக் கொண்டிருக்கின்றனரோ அதன் மூலம் கிடைப்பதுதான் புகழ் என அய்யன் வள்ளுவனின் வாக்கு. ஆனால், இன்று அதையெல்லாம் மறந்து புகழுக்காகப் புகழ் வெறி பிடித்து புகழ்ச்சிக்காக மயங்கி பல தவறான செயல்களைச் செய்து நல்லவர் போல் வேடமிட்டுக்கொண்டு புகழ் மலையில் நனைந்து கொள்கின்றனர். இந்தப் புகழ்ச்சிக்காகப் பல தீய செயல்களைச் செய்வதற்கும் அஞ்சுவதில்லை. ஆனால், இந்தப் புகழ் என்பது நிலையற்றது என்பதை கவிஞர் அவர்கள்

> ............................................................
> இகவாழ் விதில்புகழ் என்பதோ மாயையன்றோ!
> (புகழ் என்பது மாயை,பக்கம் 29,மொழி)

என்ற கவிதைக் கொச்சகத்தில் இப்பொழுது நாம் வாழுகின்ற வாழ்வில் புகழ் என்பது நிலையற்றது என்பதை உணர்த்துகின்றார்.

**ஏற்ற தாழ்வு பார்க்கும் மனப்பான்மையை விட்டொழிக்க வேண்டும்**

இன்றளவும் நம் சமுதாய மக்களிடையே ஏற்றத்தாழ்வு பார்த்து திருமணம் முடிக்கும் பழக்கம் இருக்கின்றது. யார் உயர்ந்த குலம் யார் தாழ்ந்த குலம் என்ற பிரிவினையை ஏற்படுத்தி திருமணத்தை முடிவு செய்கின்றனர். இதுபோன்று தரம் பார்த்து திருமணத்தை முடிவு செய்து கொண்டிருந்தால் திருமணமே செய்து கொள்ள முடியாமல் போகும் பெண்களின் எண்ணிக்கை பெருகி வாடுவர் என்பதை

> தரமென்று நம்பிஒரு
> சாதியிலே மணமுடித்தால்
> வரனின்றி வாடுகின்ற
> மாதர்குலம் பெருகுமடா!
> (பருவத்தே, பக்கம் 56, குமுகாயம்)

என்ற வரிகளில் கூறியிருக்கின்றார். இதனை நன்கு ஆராய்ந்தால் இளைய சமுதாயம் ஏற்றத்தாழ்வு பார்க்கும் மனப்பான்மையை விட்டு ஒழித்து அனைவரும் சமம் என்ற மனப்பக்குவத்தைத் தன்னுள்ளே வைத்து வளர வேண்டும் என்ற சிறந்ததொரு வழிகாட்டும் எண்ணத்தைக் கவிஞர் இங்குக் கூறியிருக்கின்றார்.

**யாரையும் எளிதில் நம்பிவிட கூடாது**

நம்பிக்கை துரோகிகளும், நயவஞ்சகர்களும் பெருகிவிட்ட காலம் இது. நல்லவர்கள் போல வேடமிட்டு நினைத்த காரியத்தை நம் மூலம் நிறைவேற்றிக் கொண்டு வீண் பழியை நம் மீது சுமத்தி விட்டு நல்லவர்கள் போலவே உலாவி வரும் மனிதர்கள் அதிகமாகிவிட்டனர் இன்றைய காலகட்டத்தில். எனவே, இதில் யார் வேடமிட்டு பொய்யாக நம்மிடம் பழகிக் கொண்டிருக்கின்றனர் என்பதையும் காரியத்துக்காக நம்மை யார் பயன்படுத்துகின்றனர் என்பதையும் நன்கு அறிந்து ஒருவரை நம்பி பழக வேண்டும் என்பதை இந்தக் கவிதை வரிகளின் மூலம் சிறந்ததொரு எச்சரிக்கை கருத்தை இன்றைய இளைஞரருக்கு எடுத்துரைக்கின்றார், இவ்வாறு

இருக்கும்வரை உறவாடும் ஈனர்களை நம்பி
எந்தஒரு காரியத்தும் இறங்காதே தம்பி!
உருவினிலே நல்லவர்போல் உலவிடுவார்; கவனம்!
உலுத்தர்களை உள்ளூர உய்த்துணர்வாய் தம்பி!
(உன்னைத்தான் தம்பி, பக்கம் 84, குமுகாயம்).

**காதலர்களிடையே ஒருவருக்கொருவர் நம்பிக்கை கொள்ள வேண்டும்**

காதலர்களிடையே இருக்கக்கூடிய உறவில் என்றும் நம்பிக்கை நிறைந்திருக்க வேண்டும். ஒருவருக்கொருவர் தங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கை தான் ஒரு காதலின் வலிமையை உணர்த்துகின்றது. இதில் ஒருவருக்கு நம்பிக்கை இழந்தாலும் அந்தக் காதல் வலிமையற்றதாகிவிடும். ஆனால், அந்தக் காதலில் நம் உறுதியாக இருக்கின்றோம் என்று ஒருவருக்கொருவர் தங்கள் நம்பிக்கையைத் தெரிவிக்கும் பொழுது தான் காதல் மேலும் வலுவடைகின்றது. இதனையே கவிஞர் அவர்கள் ஒரு காதலன் தன் காதலின் மீது எந்த அளவிற்கு காதல் வைத்திருக்கின்றான் என்பதை கூறியதும் ஒரு காதலி எவ்வளவு மகிழ்ச்சி அடைகின்றாள் என்பதைக் கூறுகின்றார், இவ்வாறு

கடலது வற்றினும் தென்றல்
காற்றது அடங்கினும் வையம்
உடைந்திரண் டாயினும் மறவேன்
உன்னை" என்றதும் முகமலர்ந்தாள்!
(காதலி, பக்கம் 111, காதல்)

**நிறைவுரை**

இன்றைய இளைஞர்கள் தனித்து இயங்கக் கூடிய அளவிற்குச் சிந்தனைகளைக் கொண்டிருந்தாலும் ஒரு சில நேரங்களில் அவர்களுக்கு வழிகாட்டிகள் அவசியமே. அந்த வகையில் இந்த பூந்தழல் மரபு கவிதைத் தொகுப்பு என்று இளைஞர்களுக்குச் சிறந்தது

ஒரு வழிகாட்டியாக அமைகின்றது என்பது இந்த ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது. மொழி சார்ந்து இனம் சார்ந்து தனிநபர் வாழ்க்கை சார்ந்து ஒரு இளைஞன் எவ்வாறு தம்மை செம்மைப்படுத்தி வாழ வேண்டும் எவ்வாறான அறக்கருத்துக்களை வாழ்க்கையில் பின்பற்ற வேண்டும் என்பதை இந்த கவிதைத்தொகுப்பு எடுத்துக் கூறியுள்ளது. எனவே, இவை இளைஞர்களுக்குச் சிறந்ததொரு வழிகாட்டியாக அமைகின்றது என்பது நிரூபணமாகியுள்ளது.

**துணைநூற்பட்டியல்**

Asaithamby, M. (2021). Poonthazhal: antolaji tamil kavitaikal. Uma Publications.

Taylor, A. (2020, December 30). Practical Guide for the Young Generation in Achieving Success. Young People. Retrieved May 2, 2023, from https://www.youngpeopletoday.net/a-young-generations-guide-in-achieving-success-with-self-improvement/

Wildling Books Offer Hope and Guidance to A Younger Generation. (2021, October 15). Good Magazine. Retrieved May 2, 2023.